உ


தணிகை பஞ்சாங்கம்  பாலு சரவண சர்மா

*பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கண ணம்*

தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677

மின் னஞ்சல்: prohithar@gmail.com   இணையம்: www.prohithar.com   இணையம்: www.thanigaipanchangam.com

எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென் னை 45, பாரத நாடு.




**Karudayan Nunbu 2013 to 2022**

# காருடையான் நோன்பு நேரம்

***2013ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை – கணிப்பு : தணிகை பஞ்சாங்கம்***

## ⌘ திருக்கணித பஞ்சாங்கம் -  திருக்கணித சித்தாந்தம் (லஹரி அயனாம்ஸம்) முறை

| வருடம் | மாதம் | தேதி | கிழமை | நேரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 2013 | மார்ச் | 14 | வியாழன் | மாலை 4:58 | |
| 2014 | மார்ச் | 14 | வெள்ளி | இரவு 11:07 | |
| 2015 | மார்ச் | 15 | ஞாயிறு | அதிகாலை 5:19 | ஆங்கில முறை நாள் படி |
| 2016 | மார்ச் | 14 | திங்கள் | காலை 11:19 | |
| 2017 | மார்ச் | 14 | செவ்வாய் | மாலை 5:34 | |
| 2018 | மார்ச் | 14 | புதன் | இரவு 11:44 | |
| 2019 | மார்ச் | 15 | வெள்ளி | அதிகாலை 5:41 | ஆங்கில முறை நாள் படி |
| 2020 | மார்ச் | 14 | சனி | பகல் 11:55 | |
| 2021 | மார்ச் | 14 | ஞாயிறு | மாலை 6:05 | |
| 2022 | மார்ச் | 14 | திங்கள் | இரவு 12:18 | ஆங்கிலப்படி 15.3.2022 செவ்வாய் அதிகாலை 00:18 |

## ⌘ வாக்கிய பஞ்சாங்கம் - வரருசி வாக்கிய கரணம் (ஆரியபட்டீயம் சித்தாந்தம்) முறை

சென் னை சூரிய உதயம் 6:22 என வைத்து கணிக்கப்பட்டுள்ளது

| வருடம் | மாதம் | தேதி | கிழமை | நாழிகை | நேரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 2013 | மார்ச் | 14 | வியாழன் | 24:20 | மாலை 4:06 | |
| 2014 | மார்ச் | 14 | வெள்ளி | 39:52 | இரவு 10:18 | |
| 2015 | மார்ச் | 15 | ஞாயிறு | 55:23 | அதிகாலை 4:31 | ஆங்கில முறை நாள் |
| 2016 | மார்ச் | 14 | திங்கள் | 10:54 | காலை 10:44 | |
| 2017 | மார்ச் | 14 | செவ்வாய் | 26:25 | மாலை 4:56 | |
| 2018 | மார்ச் | 14 | புதன் | 41:56 | இரவு 11:08 | |
| 2019 | மார்ச் | 15 | வெள்ளி | 57:28 | அதிகாலை 5:21 | ஆங்கில முறை நாள் |
| 2020 | மார்ச் | 14 | சனி | 12:59 | பகல் 11:34 | |
| 2021 | மார்ச் | 14 | ஞாயிறு | 28:30 | மாலை 5:46 | |
| 2022 | மார்ச் | 14 | திங்கள் | 44:01 | இரவு 11:58 | |

குறிப்பு:  ஆங்கில முறை நாள் என் பது நள்ளிரவு முதல் மறுநாள் நள்ளிரவு வரை
இந்து முறைப்படி நாள் என் பது சூரிய உதயம் முதல் மறுநாள் சூரிய உதயம் வரை

**சூரிய உதயம் கணக்கிடுவதில் உள்ள பலமுறைகள் காரணமாக நேரங்கள் சுமார் 3 நிமிட வேறுபாடு இருக்கும், இது பிழை அல்ல!**

காருடையான்  நோன் பு வழிபாடு உகந்த நேரம்:

- மேற்படி குறிப்பிட்ட நேரத்திற்கு 1 மணி நேரம் முன் னர் மஞ்சள் சரடு பூஜை செய்வது நன் று
- நள்ளிரவாக இருப்பின்  சற்று முன் னர் செய்து வழிபடவும்

**காருடையான்  நோன் பு**

(தொகுப்பு: பாலு சரவண சர்மா)

வடக்கே சத்தியவான்  சாவித்திரி நோன் பு என் றும் தெற்கே காருடையான்  நோன் பு என் றும் அழைப்பதுண்டு. மாதங்கள் மாசியும் பங்குனியும் சந்திக்கும் வேளை அதாவது மாசி கடைசி நாளின்  கடைப்பகுதியும் பங்குனி ஆரம்பமும் சந்திக்கும் வேளையாகும்.

சாவித்திரி தனது மணாளனின்  உயிரைக்கவர்ந்து சென் ற எமனின்  பின் தொடர்ந்து தன் னுடைய பதிபக்தியின்  மகிமையாலும் வாக்கு சாதுர்யத்தினாலும் மீளவும் கணவனுடைய உயிரை பெற்றுத் தக்கவைத்துக் கொண்டு மேலும் நீண்ட நாள் வாழ்ந்ததாக புராணம்

பேசுகின்றது. கணவனின் உயிரைமீளவும் பெற்று வெற்றி பெற்றமையை நினைவு கூர்ந்து கொண்டாடும் விரதம்தான் காரடையார் நோன்பு

நோன்பு என்பது உண்ணாவிரதம் அல்லது தவம் என்று பொருள்படும். விதவைக் கோலம் தவிர்க்க வேண்டப்படும் இந்நோன்பு பெண்களுக்கே உரிய சடங்காக மங்கல மங்கையரால் நிகழ்த்தப்படுகின்றது.

மதுராவின் அரசனும் தேவி மாலதியும் 18 ஆண்டுகள் குழந்தையின்றி வாழ்ந்து அன்னை சாவித்திரியின் அருளால் தவத்தின் இறுதியில் மகப்பேறு பெற்று சாவித்திரி என்று பெயரிட்டு, வளர்த்து, அப்பெண்ணுக்கு பருவத்தே மணமுடிக்கஎண்ணுகையில் தக்க மணாளன் கிடைக்கவில்லை என்று கருதி பெண்ணின் விருப்பம் கேட்க, நாடிழந்து தவிக்கும் மன்னன் தும்யசேனனின் மகன் சத்தியவான் சிறந்தவன் என்று தீர்மானிக்க,சத்தியவானின் ஆயுள்காலம் இன்னும் ஒருவருடம்தான் என்று அறிந்தும் “வாழ்ந்தால் அவனுடன் தான் வாழ்வேன் . அது ஒரு நாளாயினும் சரி” எனக் கூறி துணிந்து மணாளனாய் ஏற்றாள்.

கணவனின் உயிரைக் காக்கவேண்டி கடும் விரதமிருந்து அன்னை காமாட்சியைப் பூசித்து வந்தாள். மாசி மாதம் முடிந்து பங்குனி மாதம் பிறக்கும்பொழுது சத்தியவானின் ஆயுள் பிரியும். அந்நேரத்தே, காட்டில் கிட்டிய மண்ணைப் பிசைந்து அடையாகத் தட்டி அன்னை காமாட்சிக்குப் படைத்துப்பின் அதையே உண்டு தன் விரதத்தை முடித்துக்கொண்டாள்.

மணாளன் காட்டினில் வசிக்கும் போது அவனுடன் அவளும் வாழ்ந்துவருகையில் சத்தியவான் ஒருநாள் விறகு வெட்டிக் கொண்டிருக்கையில் மயக்கமுற்று சாவித்திரியின் மடியில் படுக்கவும் கூற்றுவன் சிவந்தமேனியில் சென்னிற ஆடையணிந்து உயிர்பறிக்கும் பாசக் கயிற்றுடன் வருவதையறிந்து மருண்டாள். உயிரைக் கவர்ந்தவன் தன்வழிசெல்ல, செட்டியை நீலி தொடர்ந்ததுபோல் கூற்றுவனின் பின் அவள் தொடர்ந்துசென்றாள்.

'இறந்தவனின் ஈமச்சடங்குகளைச் செய்யவேண்டியதிருக்க வீணே என்பின்னே ஏன் வருகின்றாய்?' என, ''கணவன் செல்லும் இடத்திற்கு அவனது பத்தினியாகிய நான் உடன் வந்துகொண்டிருக்கின்றேன்'' என்று அவள் பதில் கூற, அவளைத் திரும்ப அனுப்புவது இலகுவன்று என்பதைஉணர்ந்த எமன் , வரம் தருவதாக வாக்களித்தான் .

தன் வயோதிக மாமனார் மாமன்னர் தும்யசேனனுக்குப் பார்வை அருளவேண்டும் எனகேட்கவும் வழங்கி அருளினானான் . மேலும் ஒன்று தருவதாய்க் கூற, இழந்த நாட்டினைவயோதிக மன்னர் திரும்பவும் அடைய அருள வேண்டும் என, அதுவும் வழங்கப்பட்டது. மேலும் வழக்கு தீராததால் அடுத்து ஒன்று அருளுவதாய்க் கூறினான் . தனக்கு நூறு மக்கட்பேறுவேண்டும் என்றாள். உடன் அப்படியே ஆகட்டும் (ததாஸ்து) என்றான் எமன் .

மேலும் ஒன்று தருவதாகச் சொன்னான் எமன் . அவள் அவ்வரத்தின் பேரால் அந்த நூறு குழந்தைகள் சத்தியவான் மூலம் கிடைக்கவேண்டும் என்றாள். வரத்தையும் ஈந்து அவள் கணவனின் உயிரைப் பிழைப்பித்தான் . அவளது பதிபக்தியினைப் பாராட்டி நீண்டநாள் வாழ வாழ்த்திச் சென்றான் எமதர்மன் .

மண்ணடையை உண்டதை அடிப்படையாகக்கொண்டு இன்றும் பெண்கள் ஆலயங்களில் “மண்சோறு” உண்ணும் நோன்பு நோற்கிறார்கள்.

காலம் செல்லச் செல்ல, முதல் போக(கார்) நெல்லைக் குத்தி, அதில் அடை செய்து அன்னைக்குப் படைத்து பெண்கள் வழிபடுகின்றனர்கள். இதால், கார்+அடை நோன்பு என்பது காரடையான் நோன்பு என மருவியது. இந்நன்னாளில் பூரணகும்பம் அமைத்து, அதன் கழுத்தில் கழுத்திலணியும் மஞ்சள் கயிறுகளைச் சுற்றி வைத்து, அன்னை காமாட்சியை அழைத்து கும்பத்தில் இருத்தி(ஆவாகனம்) முறைப்படி பூசை செய்தால், அன்னை அவ்வில்லங்களுக்கு வருவாள் என நம்பிக்கை. பூசை முடிந்ததும் காரடையை உண்டு விரதத்தை முடித்துவிட்டு கும்பத்தில் உள்ள மஞ்சள் கயிற்றினை எடுத்து,”உருகாத வெண்ணையும் ஓரடையும் உனக்குத் தந்தேன் ; நான் என் கணவனுடன் எந்நாளும் இணைபிரியாது வாழ அருள் புரிவாய்” என வேண்டிக் கழுத்தில் அணிந்துகொள்வர்.

இந்நன்னாளில், சிலர் “சம்பத் கௌவுரி” விரதமிருந்து, அன்னை பார்வதியை வணங்கி,”நல்ல குழந்தைகளைக் கொடுத்து அவர்களுக்கு குறையாக் கல்விச் செல்வத்தையும் தருவாய்” என வேண்டித் தாலிச் சரடை மாற்றிக்கொள்வார்கள்.

கதை, புராணக்கதையாக இருப்பினும், காதல், வீரம், விவேகம் கலந்த இந்த சாவித்ரி மட்டும் இக்கால புதுமைப்பெண்களின் உருவமாகத் தான் தெரிகிறாள் என்பதை யாரும் மறுக்க முடியாது தானே!

எதிர் நீச்சல் போட்டு, துணிச்சலுடன் முன்னேறுகின்ற பல கோடி பெண்களின் பிரதிநிதியான இந்த சாவித்ரி நூற்ற நோன்பே இந்த காரடையான் நோன்பாகும். நம் நாட்டில் திருமணமான பெண்கள் அக்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி, தங்கள் கணவரின் நல்ல ஆயுளும், திடகாத்திரமும் வேண்டி பல்வேறு பூஜைகள் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

**மஞ்சள் கயிறு :**

திருமணமான பெண்கள் பருத்தியினால் ஆன மஞ்சள் கயிற்றை விரதம் இருந்து கழுத்தில் தாலி போல் கட்டிக்கொள்வர்.

**ப்ரசாதம்:**

விரதம் இருந்த பின்னர் அன்று பிரசாதமாக செய்த நோன்பு அடையை உண்ணுவர். பங்குனி மாத வரவுக்காக காத்திருந்து, அது அந்த நாளில் மதியமோ இரவோ அந்நேரம் வரை விரதமிருந்து "உருகாத வெண்ணையும் ஓரடையும் நான் நூற்றேன் மறுக்காமல் எனக்கு மாங்கல்யம் தா" என்று மனமுருகி வேண்டி பிரசாதத்தை உண்பார்கள்.

**காரடை:**

பச்சரிசி, வெல்லம், காராமணி, தேங்காய், ஏலக்காய் ஆகியவற்றைக் கொண்டு செய்வதாகும்.

## தற்காலமும் காரடையார் நோம்பும்.

“உருக்காத வெண்ணையும் ஓரடையும் நான் படைக்கிறேன் , ஒருக்காலும் என் கண்வர் என்னை விட்டு பிரியாத வரம் தா”, என்று நோம்பு நூற்று இறைவனிடம் வேண்டி, சத்யவான் சாவித்திரியின் புராண கதையும் படித்து பின்னர் பெண்கள் கழுத்தில் மஞ்சள் சரடு கட்டி கொள்வார்கள்.

சத்தியவானைப் பர்த்தவுடன் இவர்தான் தனுக்கு பிடித்த கணவர் என்று மனம் சொல்ல, அந்தக் கணவன் வெகு சீக்கிரமே மாண்டு போவான் என்று தெரிந்தும் தன் இறைஉணர்வால், பிரார்த்தனையால், மனதிடத்தால், நம்பிக்கையுடன் யமனுடன் போராடி சாதுர்யாமாகப் பேசி இறந்த கணவனின் உயிர் மீட்டுவந்த உத்தமி சாவித்திரி செய்த நோன்பு இது. மாசிமாதம் முடிவும் பங்குனி தொடக்கமும் நிகழும் காலத்தில் வரும் நோன்பு,

மனம் பொருந்தாமல் மஞ்சள் சரடு என்ன செய்யும்! இரு மனம் ஒன்று பட அதைவிட பலமான பந்தம் வேறொன்றுமில்லை. முன் காலத்தில் எத்தனை பிரச்சனை வந்தாலும் அது கணவன் மூலம் வந்தாலும் கணவனே கண் கண்ட தெய்வம் என்று இருந்து வாழ்க்கையை துக்கம் சுகம் என்று இரண்டும் வாழ்க்கையின் அங்கம் என நினைத்து கடைசிவரை சேவை மனப்பான்மையில் வாழ்ந்தனர். ஆகையால் இந்த நோம்பும் அவர்களுக்கு மனம் பிடித்து செய்யும் ஒன்றாக இருந்தது. அதே போல் கடைசி வரை மன நிறைவும் கிடைத்தது.

கணவனுக்காக, என்று விரதம் மேற்கொண்டாலும் அதில் குடும்பம் என்கிற உன்னத நிலைதான் முக்கியமாக உள்ளது. இல்லத்தின் நல் வாழ்வுக்காக பெண்கள் விரதம் எடுக்கிறார்கள்

கணவன் தன் மனைவியின் நல் வாழ்விற்காக விரதம் இருப்பதில்லையே இது ஒருசார்பாக உள்ளதே என்று கேட்கலாம். ஆணாதிக்க உலக நோக்கில் உருவாக்கப்பட்டு பெண்களை அடிமைகளாக்க சூழ்ச்சியுடன் வேண்டுமென தினிக்கப்பட்டது என சிலர் கூறினாலும் உண்மையில் அப்படி அல்ல! எத்தனை வீரமுடைய பெண்கள் நம் நாட்டில் போர்புரிந்து வீர மரணம் எய்தியுள்ளனர் என்பது நம் அனைவருக்கும் தெரியும்.

உலகில் மிகவும் சக்திவாய்ந்தவள் பெண்ணே! இதில் எந்த ஐயமும் இல்ல!!

**பலகாரம்**

காரடையான் நோன்பு அன்று இனிப்புக் கொழுக்கட்டை செய்வார்கள் என்றாலும் அத்துடன் சேர்த்து இதையும் செய்து பார்க்கலாம்.

தேவையான பொருள்கள்:

அரிசி மாவு – 1 கப் தண்ணீர் – 1 1/2கப் துவரை அல்லது தட்டப் பயறு – 1 பிடி
தேங்காய்த் துருவல் – 2 டேபிள்ஸ்பூன் பச்சை மிளகாய் – 4 உப்பு – தேவையான அளவு
தாளிக்க – தேங்காயெண்ணை, கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம், கறிவேப்பிலை.

செய்முறை:

முதலில் அரிசி மாவை, நிதானமான சூட்டில், சிவக்க வறுத்துக் கொள்ளவும். (அரிசியை சிவக்க வறுத்தும் மிக்ஸியில் அரைத்துக் கொள்ளலாம். நைசாக அரைத்தால் கொழுக்கட்டை மொழுக்’கென்று இருக்கும். கொஞ்சம் கரகரப்பாக அரைத்தால் சுவையாக இருக்கும்.)

அடுப்பில் வாணலியில், எண்ணை விட்டு, கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம், கறிவேப்பிலை, சிறு துண்டுகளாக நறுக்கிய பச்சை மிளகாய், தாளிக்கவும்.



அத்துடன் தட்டப் பயறைச் சேர்த்து வறுத்து, தண்ணீர் சேர்த்து, பாதிப் பதத்திற்கு வேக வைக்கவும்.

அதன்பின் வாணலியில் இருக்கும் தண்ணீர் ஒன்றரை கப் இருக்குமாறு- தேவைப் பட்டால் மேலும் சேர்த்துக் கொள்ளவும்.

அதில் தேவையான உப்பு சேர்த்து, மாவைக் கொட்டிக் கிளறி, இறுகியதும் இறக்கவும். (வெல்லத்தோடு மாவைக் கிளறும்போது, அடுப்பில் வெல்லப் பாகு உருகிய நிலையிலேயே இருப்பதால், மாவு நன்றாக இறுகிக் கிளற வரும். ஆனால் இதில் தண்ணீர் சில நேரம் இன்னும் அதிகம் தேவைப் படலாம். தயாராக ஒரு கப் சூடான தண்ணீர் வைத்திருப்பது நல்லது. தேவைப் பட்டால் உபயோகித்துக் கொள்ளலாம்.

இட்லித் தட்டில் நெய் அல்லது தேங்காய் எண்ணை தடவி, கொழுக்கட்டையாகவோ, அடைகளாகவோ தட்டி வேக வைத்து எடுக்கவும்.

நோன்பு தினம் என்பதால் மிகவும் சுத்தமாகச் செய்ய நினைப்பவர்கள், நேரடியாக வாணலியில் தட்டப் பயறை வறுத்து பாதிவரை வேகவைப்பார்கள். இப்படிச் செய்வது மிகுந்த மணமாக இருக்கும். அல்லாமல் ஒரு நான்கு மணி நேரம் முன்னாலேயே பயறை தண்ணீரில் ஊறவைத்தும் செய்யலாம். இது செய்வது சுலபம்.

**மேட்ச் ஃபிக்சிங் கார்னர்:**

நோன் பு தினம் என் பதால் தேங்காய்ச் சட்னி. மற்றபடி உப்புமாவிற்குத் தொட்டுக் கொள்ளும் எதுவும், இதற்கும் சரியே.

---

## Karwa Chauth Fast (கர்வா சௌத் விரதம்)




In Hindu Dharam, the goal of life is Self-realization or the attainment of God and fasting has been a much sought after path to attain this. All Hindu fast have a deep spiritual and religious significance. According to Hindu scriptures, fasting helps create an attachment with the God by establishing a harmonious relationship between the body and the soul. This is thought to be imperative for the well being of a human being as it nourishes both his/her physical and spiritual demands.

**Karwa Chauth Fast**

'Karwa Chauth' is a ritual of fasting observed by married Hindu women seeking the longlife, well-being and prosperity of their husbands. Married women keep a strict fast and do not take even a drop of water. It is the most important and difficult fast observed by married Hindu women. It begins before sunrise and ends only after offering prayers and worshiping the moon at night. No food or water can be taken after sunrise. The fast is broken once the moon is sighted and rituals of the day have been performed. At night when the moon appears, women break their fast after offering water to the moon.

**Importance Of Fasting**

Hindus believe it is not easy to unceasingly pursue the path of spirituality in one's daily life. Therefore a worshiper must strive to impose restrains on to get the mind focused. And one form of restraint is fasting. However, fasting is not only a part of worship, but a great instrument for self-discipline too. It is a training of the mind and the body to endure and harden up against all hardships, to persevere under difficulties and not give up.

**Medicative Properties**



The ancient Indian medical system of Ayurveda sees the basic cause of many diseases as the accumulation of toxic materials in the digestive system. Regular cleansing of toxic materials keeps one healthy. By fasting, the digestive organs get rest and all body mechanisms are cleansed and corrected. A complete fast is good for heath, and the occasional intake of warm lemon juice during the period of fasting prevents the flatulence.When is Karva Chauth 2010?

Karva Chauth date falls about nine days before Diwali on the Kartik Ki Chouth - the fourth day of the waning moon or the dark fortnight, some time in October or November.

**Karwa Chauth 2010 October 25, 2010**

Karva Chauth is of great importance for married Hindu women but the festival is seen as a big occasion for women undertaking their first Karva Chauth fast after marriage. A newly married woman is given utmost importance by relatives and immediate family members when she observes her first fast for the long life of her husband. She is showered with blessings of blissful married life and loads of Karva Chauth gifts especially by her mother-in-law.

**First Sargi**

Mother-in-law prepares an elaborate Sargi (the pre-dawn Karva Chauth meal) when her daughter-in-law observes her first fast. She wakes up much early to prepare a sumptuous and lavish meal inclusive of sweets and other delicacies for daughter-in-law. Saasu-ma blesses her bahu with an ashirvaad of 'Sada Suhagan Raho' which means, 'may you always enjoy a blissful married life' when the latter touches her feet with reverence. She also presents her daughter-in-law with gifts, which may be a piece of jewelry or a heavy saree on the first Karva Chauth.

**First Baya**

Baya is a gift given to a daughter's mother-in-law on the occasion of Karva Chauth. It usually consists of salted mathris, dry-fruits and some gifts. This Baya is a little more special when the daughter is observing her first Karva Chauth. Mothers of newly wed daughters bring gifts for all her family members. Some utensils are also included in the baya which are to be distributed amongst women who join the newly-wed on her first Karva Chauth Puja.

### Elaborate Puja Preparations

Elaborate preparations are made for the customary evening Karva Chauth Puja in a family where a newly wed daughter-in-law observes her first Karva-Chauth. Married female relatives are invited to participate in the puja. The newly married woman often wears her bridal lehanga or a heavy saree and adorns herself with lot of jewelry and make up. After the puja ceremony she seeks blessings for happy married life from all elder women. The newly wed woman distributes mathris or utensils amongst the ladies that were a part of baya.

### Gifts from Husband

Husband of the woman who observes her first Karva Chauth feel proud and great to see her better half observing such a rigorous fast for him. He gets overwhelmed with love and respect for her wife and pampers her with loads of Karva Chauth gifts. These days husbands also takes her wife out for a dinner to save her from the drudgery of day’s cooking work.

### The Ritual

Karwa Chauth is considered one of the most important fasts observed by the married Hindu women. On this day the women pray for the welfare and long life of their husbands. The festival is followed mainly in the northern parts of the country.

Married women eat food early in the morning, before sunrise. They are not supposed to eat or even drink water during the day. In the evening the ladies listen to the Karwa Chauth Katha (the legend). The fast is over after the moonrise.

### The Puja Process

The pooja preparations start a day in advance. Married women buy the shringar or the traditional adornments and the other pooja items like the karwa, matthi, heena etc.

Early in the morning they prepare food and have it before sunrise. The morning passes by in other festive activities like decorating hand and feet with heena, decorating the pooja thali and meeting friends and relatives.

In the late afternoon women gather at a common place like temple or a garden or someones' place who has arranged the pooja. An elderly lady or the pujarin narrates the legend of Karwa Chouth.

The essentials of this gathering and listening of the Karwa chauth story , a special mud pot, that is considered a symbol of lord Ganesha, a metal urn filled with water, flowers, idols of Ambika Gaur Mata, Goddess Parwati and some fruits, mathi and food grains. A part of this is offered to the deities and the storyteller.




Earlier an idol of Gaur Mata was made using earth and cowdung. Now just an idol of Goddess Parwati is kept. Every one lights an earthen lamp in their thalis while listening to the Karwa story. Sindoor, incense sticks and rice are also kept in the thali.

At this time the women wear heavy saris or chunries in red , pink or other bridal colors, and adorn themselves with all other symbols of a married women like, nose pin, tika, bindi, chonp, bangles, earrings etc.

Once the moon rises, the women see its reflection in a thali of water, or through a dupatta or a sieve. They offer water to the moon and seek blessings. They pray for the safety, prosperity and long life of their husbands. This marks the end of the day long fast.

## கர்வா சவுத்!

இது ஒரு நோனபு வடநாட்டில் பெண்களால் நூற்கும் நோன்பு.

ஆண்களுக்கு என்று எந்த நோன்பு இருக்கிறது? தெரியவில்லை

நம்முடைய காரடை நோன்பு போல் இதுவும் கணவரின் நீண்ட ஆயுள் சுபீட்சத்திற்காகவும் நூற்கிறார்கள். முன்பு சிறு வயதில் மணம் ஆகிவிடுமாதலால் அந்தப் பெண்கள் தனக்கென்று உயிரைக் கொடுக்கும் அன்புத்தோழியை அடைந்து அவர்களிடம் மனம் விட்டுப் பேசுவார்கள். அவர்களுக்கு தங்கள் மாமியாரிடமோ அல்லது வேறு புகுந்த வீட்டு உறவினர்களிடமோ பேச பயமும் சங்கோசமும் இருக்கும். ஆகையால் இந்த மாதிரி தோழிகளின் குழுவை ஆதரித்தனர்.

இந்த நோன்பு சரத் பூர்ணிமா முடிந்து சதுர்த்தி அன்று வரும், நமக்கு அன்று சங்கட சதுர்த்தி இருக்கும். chowth என்றால் சதுர்த்தி. அன்று அவர்கள் காலை சூரியன் உதித்த பின், தண்ணீர் கூட இல்லாமல் இரவு வரை இருந்து பின் சந்திரனைக் கண்டபின் சாப்பிடுவார்கள். ஆனால் அன்று அவர்கள் ஜொலிக்கும் காட்சி சொல்ல முடியாது, எல்லோரும் அப்படி ஒருஅலங்காரம் செய்துக்கொண்டு வளைய வருகிறார்கள்.

பஞ்சாபி பெண்கள் தான் இதில் முதல் இடம். ,சினி நடிகை போல் பள பள ஸாரியில்...அல்லது கல்யாணப் புடவை...காக்ரா சோலியில்...கை நிறைய வளையல்களுடன் , உதட்டில் சிவப்பு சாயத்துடன் கைகளில் மெஹந்தி பல டிசைன் களுடன் கால்களில் அல்டா என்ற சிவப்பு வர்ணத்தை நலங்கு போல் இட்டுக்கொண்டு ஆஹா! பார்க்க ரொம்ப ஜோர்தான் , இதற்கு வயது வரம்பு கிடையாது சிலர் தனக்குப் பொருந்தாததாக இருந்தாலும், தோசைக்கல் போன்று பெரிய காதணியை மாட்டிக் கொண்டு இருப்பார்கள். பாவம் காது பிய்ந்து விடுமோ என்று எனக்கு பயமாக இருக்கும். அவர்கள் கணவர்களும் அதை ரசிப்பதால் மகிழ்சியாகக்கொண்டாடுகிறர்கள். பின்னர் மாலை வட்டமாக உட்கார்ந்து, நடுவில் ஒரு பெரிய விளக்கு வைத்து பேணி என்ற விரத சேவை மற்ற பல வித பழங்கள், கேசரி போல் பிரசாதம் வைத்து பூஜை ஆரம்பிக்கிறார்கள். கையில் ஒருதட்டில் கோதுமை மாவில் செய்த விளக்கேற்றி நடுவில் வைத்து, அந்தக் கதையைப் பாட்டாகப் பாடி, ஒவ்வொருவராகத் தட்டை பெற்று ஆரத்தி எடுக்கிறார்கள்

**அதன் கதை:**

வீராவதி எழு சகோதர்களுக்கு நடுவில் செல்லப் பெண். ஒரு ராஜாவை மணம் புரிந்து கொண்டாள். ஒரு சில தினங்களில் தாய் வீடு சென்றாள். இந்த நோன்பை கணவரின் நலனுக்காக நூற்கலானாள். தன் அன்பு சகோதரி பட்டினி கிடப்பதைப் பார்த்து சகியாமல், சகோதரன் ஒரு கண்ணாடியை காட்ட அதன் பிரதிபிம்பம் மரத்தின் இடுக்கு வழியாகத் தெரிய, வீராவதி சந்திரன் என்று நினைத்து நோன்பை முடித்து சாப்பிட்டாள். அவள் கணவன் இதனால் உடல் நலம் குன்ற மிகவும் மோசமாகி இறந்து விடுகிறான். பின் இடைவிடாப் பிரார்த்தனையில் சிவன் பார்வதி வர வீராவதி மனமுருகி மன்னிப்புக் கேட்க கணவன் பிழைத்து எழுகிறான் .

அன்றிலிருந்து கடும் விரதமாக சந்திரனைப் பார்க்கும் வரை பட்டினி கிடக்கும் கொள்கை வந்ததாம். நம் சாவித்திரி சத்தியவான் நோம்பு ஞாபகம் வந்தது. எது எப்படியோ ஒரு நாள் வயிறுக்கு ஒய்வு நல்லது தான். தவிர வளை வியாபாரி, மருதாணி போட்டு பிழைக்கும் கூட்டம்,

**குறிப்புகள்:** காத்டையான் என்பது பண்டையக் காலத்தில் முக்கிய கிராமங்களில் வசித்த தமிழ் சமுதாயத்தைக்குறிப்பிடுவதாக 'என்சைகிளோபீடியா ஆப் தமிழ் லிட்டரேச்சர்' என்னும் பனுவலில் அதன் ஆக்கியோர் திரு சிங்காரவேலு முதலியார் குறிப்பிடுகிறார்.
http://www.treasurehouseofagathiyar.net/29400/29437.htm

---

இந்த கட்டுரையில் நோன்பு தொடர்பான சில தகவல்கள் இணையத்தில் இருந்து பெறப்பட்டு சுவையூட்ட, நோன்பு நேரம் மற்றும் சில கூடுதல் தகவல்கள் என்னால் சேர்க்கப்பட்டுள்ளது. அச்சு எடுக்கவும், பரப்புரைக்கு பயன்படும் வகையில் மின்புத்தக வடிவில் இதை உருவாக்கியுள்ளேன் .

---

**தணிகை பஞ்சாங்கம் பாலு சரவண சர்மா**
*பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*
Telphone: 91 44 2226 1742, 91 98403 69677 Email: prohithar@gmail.com
Web: http://www.prohithar.com Web: http://www.thanigaipanchangam.com
No 9, 4Th Cross Street, Kalyan Nagar, Tambaram West, Chennai 600045, India



## இந்து பண்டிகைகள்

Hanuman Jayanthiஹனுமத் ஜெயந்தி ,Boghi போகி, மகர சங்கராந்தி Makarsankranti,மாட்டு பொங்கல் Mattu Pongal, காணும் பொங்கல் Kanum Pongal,ஜல்லிக்கட்டு Jalli kattu, கோமாதா பூஜை Gomatha Poojai, Festival திருவிழா, வைபவம், உற்சவம், தொப்பம், குடமுழக்கு, கும்பாபிஷேகம், தை கிருத்திகை thai Krithigai,பீஷ்ம ஏகாதசி Bhishma Ekadashi,தை பூசம் Thai Poosam,தை அமாவாசை Thai Amavasai,சனி அமாவாசை Sani Amavasai,வசந்த பஞ்சமி, வஸந்த நவராத்திரி Vasant Panchami,ரத சப்தமி, Ratha Sapthami,சனி பிரதோஷம் Sani Pradosham,மாசி மகம் Masi Maham, Kumbha Mela, கும்பமேளா ஹரித்வார் ,சனி மகா பிரதோசம் Sani Maha Pradosham,மகா சிவராத்திரி, மஹா சிவராத்திரி, மஹா சிவராத்திரி, மகா சிவராத்திரி Maha Shivaratri, காருடையான் நோன்பு Karadaiyan Nombu, சிவராத்திரி நோன்பு Savitri Nonbu Vritham,ஹோலி பண்டிகை Holi,Panguni Uttaram பங்குனி உத்திரம் ,யுகாதி, தெலுங்கு வருட பிறப்பு, Ugaadi Telugu New Year,வருஷப்பிறப்பு, Vishu விஷூ கணி , சித்திர பிறப்பு, தமிழர் புத்தாண்டு, தமி.ழ் வருட பிறப்பு, Tamil New Year chithiri pirappau, tamil pudhu varudam,ஆங்கில புத்தாண்டு New Year,ஶ்ரீ ராம நவமி, Sri Ramanavami, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம், கள்ளழகர் வைகா ஆற்றில் இறங்குதல், Madurai Meenakshi Thiru Kalyanam,மஹாவீர் ஜெயந்தி Mahavir Jayanti, சித்திரா பௌர்ணமி இந்திர விழா, சித்ரகுப்தர் பூஜை, Chitra Pournami, பலராம ஜெயந்தி, Balarama Jayanthi, அக்ஷய திருதியை, அட்சய திருதியை, Akshaya Tritiya, இராமானுஜர் ஜெயந்தி Sri Ramanuja Jayanthi, சங்கரர் ஜெயந்தி Sri Sankara Jayanthi,வசந்த காலம், வாசவி, வாஸவி ஜெயந்தி Vasavi Jayanthi,நரசிம்ம ஜெயந்தி, நரஸிம்ஹ, வைகாசி விசாகம், புத்த பூர்ணிமா, Narasimha Jayanti,Vaikasi Visakam, குரு கிரக பெயர்ச்சி, சனி கிரக பெயர்ச்சி, ராகு, கேது கிரக பெயர்ச்சி, ராசி பலன் , மாத பலன் , நட்சத்திரம், Guru Peyarchi, அங்காரக சங்கடஹர சதுர்த்தி, Angarak Sankatahara Chadurthi, சனி அமாவாசை, சோமவார அமாவாசை, Sani Amavasai, கூர்ம ஜெயந்தி Koorma Jayanti, ஆனி திருமஞ்சனம் Aani Thirumanjanam, ஆடி கிருத்திகை Aadi Krithigai, ஆடி வெள்ளி, Aadi Velli, ஆடிப்பெருக்கு, பதினெட்டாம் பெருக்கு, Aadi Peruku, ஆடி அமாவாசை Aadi Amavasai, ஆடி பூரம், ஆடி அம்மன் திருவிழா, தீமிதி திருவிழா, உறியடி, கூழ் வார்த்தல்,Aadi Pooram, நாக சதுர்த்தி, நாக பஞ்சமி, கருட பஞ்சமி, Naga Chadurthi,Garuda Panchami,Naga Panchami, வரலட்சுமி விரதம் Varalakshmi Vratham, ஆவணி ஆவிட்டம், யஜுர் உபாகர்மா, ஸாம வேத உபாகர்மா Aavani Avitam, ரக் ஷா பந்தன் , ராக்கி, Raksha Bandhan, காயத்ரி ஜபம், காயத்திரி மந்தரம் Gayatri Japam, மஹா சங்கட ஹர சதுர்த்தி Maha Sankadahara chaturthi, முனித்ரய ஜெயந்தி Munithirya Jayanthi, ஶ்ரீஜெயந்தி, வைஷ்ணவ ஜெயந்தி,Sri Jayanthi, கிருஷ்ண ஜெயந்தி, கோகுலாஷ்டமி, பாஞ்சரத்திர ஜெயந்தி,Krishna Jayanthi, கிருஷ்ணாஷ்டமி Gokulashtami,Kalashtami,கல்கி ஜெயந்தி Kalki Jayanthi,விநாயகர் சதுர்த்தி, பிள்ளையார் சதுர்த்தி, Vinayaga Chaturthi, அகவல், ரிஷி பஞ்சமி, Rishi Panchami,வாம ஜெயந்தி, Sri Vamana Jayanthi, திருவோணம், மகாபலி, Onam Festival, உமா மகேஸ்வர விரதம், Uma Maheswara Vratham,மஹாளையம், மகாளயம், மஹாலயம் பட்சம், Mahalaya Paksha ,மஹாளய அமாவாசை மகாளய அமாவாசை Mahalaya Amavasai, நவராத்திரி துவக்கம், கொலு, Navaratri Begins, புரட்டாசி சனி Purataasi Saturday, மஹா துர்காஷ்டமி, Maha Durgashtami, சரஸ்வதி பூஜை, Saraswati Pooja Ayudha Pooja, ஆயுத பூஜை, மஹா நவமி, Maha Navami, விஜய தசமி, வித்யாரம்பம், Vijayadasami, விஷூ புண்ய காலம், Vishu Punyakalam, ஐப்பசி, சிவன் அன்னாபிஷேகம், Aippasi Ayppaci Maha Annabhishekam, லட்சுமி, லஷ்மி குபேர பூஜை, Lakshmi Kubera Pooja,நரக சதுர்தசி குளியல், Naraga Chadurdasi, கங்கா ஸ்நானம், Ganga Snanam, துலா ஸ்நானம், Thula Snanam, தீபாவளி, Deepavali, Diwali, தீப ஒளி, சதுர்தசி நோன்பு, தீபாவளி நோன்பு, deepavli nonbu, தீபாவளி படையல், Deepavali Padayal, Chathurdasi Nonbu, Naga Chadurthi, கார்தீகை, கார்திகை சோம வராம், ஸ்கந்த ஷஷ்டி, சஷ்டி பூஜை விரதம், Skanda Shashti, திருச்செந்தூர் முருகன் சூர சம்ஹாரம் Soora Samharam,Thiruchandur, திருவண்ணாமலை தீபம், அண்ணாமலை தீபம், Thiruvannamalai Deepam, Annamalaiyar Deepam, பாஞ்சராத்திர தீபம், Pancharathina Deepam, வைகானாஸ தீபம், Vaiganasa Deepam, பரணி தீபம், Barani Deepam,கால பைரவ அஷ்டமி, Kala Bhairavashtami,Sukla Pradosham, சோம பிரதோஷம், Soma Pradhosham, தத்தாத்ரேய ஜெயந்தி, Dattatreya Jayanthi, ஆருத்ரா தரிசனம், திருவாதிரை திருநாள், தில்லை நடராஜர், Aaruthra Darisanam, பரசுராம ஜெயந்தி, Parasurama Jayanthi, உத்திராயணம், தட்சிணாயனம், தக்ஷணாயனம், புண்ணிய காலம், சிரார்தம், தெவசம், தர்பணம், மாத சங்கரமணம், வருஷ பிறப்பு, Utrayana Punyakalam, Dakshnayan Punyakalam, Vausha Sankaramanam, மன்வாதி, கல்பாதி, Manvathi, Shanvathi, Vyatipatham, Maha மஹா வியதீபாதம், Viyathipadam, கூடாரவல்லி, Godaravalli, மார்கழி திருவிழா, Markazi, Arudhra Darisanam, Thiruvathirai, Sankadahar Chathurthi, சுக்ல சஷ்டி விரதம், ஏகாதசி விரதம், Sukla Sashti, வைகுண்ட ஏகாதசி, சொர்க வாசல், ஶ்ரீரங்கம், Vaikunda Ekadasi, திருப்பதி Tirmal Thirpathi Brahamosatvam, பிரம்மோர்ச்சவம், கும்பாபிஷேகம், Kumbabishegam, Bairava Ashtami, காளி பூஜை, Kali, Kaali Pooja, அனந்த விரதம், Anantha virtam, சத்ய நாராயண விரதம் பூஜை, வSathya Narayana Poojai, Chitra Gupatha Poojai, மன்மத ஏகாதசி, Manmatha Ekadai.

---